ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA



பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணம் மற்றும் வங்கித்தொழில், சென்மதி நிலுவை மற்றும் உண்மைத் துறை ஆகிய பிரிவுகளில் அதன் மூத்த பொருளியலாளர்கள் குழுவுடன் இணைவதற்கு அதிக ஆர்வமிக்க தொழில்சார் நிபுணர்களை இலங்கை மத்திய வங்கி தேடுகின்றது

# மூத்த பொருளியலாளர்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின்

## 1.0 பணி / பொறுப்புக்கள்:

- சான்று அடிப்படையிலான கொள்கை வகுத்தலுக்கும் தகவலறிந்த தீர்மானமெடுத்தலிற்கும் துணையளிப்பதற்காக பேரண்டப்பொருளாதார, நாணய, நிதியியல், வெளிநாட்டுத் துறை மற்றும் உண்மைத் துறை அபிவிருத்திகள் மீதான பொருளாதார ஆராய்ச்சி, நாணயக் கொள்கை மற்றும் ஏனைய பகுப்பாய்வு அத்துடன் தொழில்நுட்ப ரீதியிலான ஆய்வுகளை முன்னெடுத்தல்.
  - பொருளாதார மற்றும் புள்ளிவிபரவியல் தரவுகளைப் பகுப்பாய்வுசெய்தல் மற்றும் வியாக்கியாணம் செய்தல் அத்துடன் தரவுத்தளங்கள், பகுப்பாய்வுசார் கட்டமைப்புகள், மாதிரிகள் மற்றும் எதிர்வுகூறல் கருவிகள் ஆகியவற்றை உருவாக்கி பேணுவதற்குப் பங்களிப்புச் செய்தல்.
  - மூத்த முகாமைத்துவம், கொள்கைவகுக்கும் நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய ஆர்வலர்கள் போன்றோருக்கான உயர்தரத்திலான அறிக்கைகள், கொள்கை விளக்கங்கள், சபை பத்திரங்கள், எடுத்துரைப்புக்கள் மற்றும் ஏனைய பகுப்பாய்வுசார் வெளியீடுகள் போன்றவற்றைத் தயாரித்தல்.
- தரவுகளை வெளியிடுதல் மற்றும் பரப்புதல்
  - துல்லியம், நம்பகத்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் நிறுவனசார் மற்றும் பன்னாட்டு ரீதியிலான தேவைப்பாடுகளுடன் இணங்குதல் என்பவற்றை உறுதிசெய்து, பொருளாதாரப் புள்ளிவிபரவியல், ஆராய்ச்சியில் கண்டறிந்தவைகள் ஆகியவற்றைச் சேகரித்தல், திரட்டுதல், பரப்புதல் மற்றும் வெளியிடுதல் அத்துடன் நியதிச்சட்ட வெளியீடுகளுக்குப் பங்களித்தல்.
- பொருளாதார மற்றும் கொள்கை சார்ந்த விடயங்கள் தொடர்பாக அரசாங்க முகவராண்மைகள், நிதியியல் நிறுவனங்கள், பன்னாட்டு அமைப்புகள் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்கள் உள்ளடங்கலாக உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ஆர்வலர்களுடன் ஈடுபடுதல் மற்றும் ஒருங்கிணைத்தல்.
- தொழில்நுட்பசார் குழுக்கள், பணிக் குழுக்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சி முன்னெடுப்புக்கள் மற்றும் கூட்டான ஆராய்ச்சி நடவடிக்கைகள் என்பவற்றில் நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அதேவேளை, பொறுப்புத் துறையினுள் அடங்கும் விடயங்களில் நிபுணத்துவ உள்ளீடுகளையும் ஆலோசனைசார் ஆதரவினையும் வழங்குதல்.
- கனிஷ்ட நிலை ஊழியர்களுக்கான வழிகாட்டல், மேற்பார்வை, பயிற்சி மற்றும் நெறிப்படுத்துகையை வழங்குதல், தொழில்சார் அபிவிருத்தியைப் பேணிவளர்த்தல், பகுப்பாய்வுசார் இயலளவுகளை வலுப்படுத்துதல் மற்றும் உயர்ந்தளவிலான செயலாற்றல்மிக்க பணிக் கலாசாரத்தை மேம்படுத்துதல்.
- இப் பணி விபரிப்பானது இப்பதவிக்குரிய முதன்மை கடமைகள் மற்றும் பொறுப்புக்களை எடுத்துரைக்கின்றதுடன் முழுமையானதொன்றாக கருதப்படலாகாது. தெரிவுசெய்யப்படும் அபேட்சகர், தேவைக்கேற்றவாறு மத்திய வங்கியின் தொழிற்பாட்டுத் தேவைப்பாடுகளுக்கேற்ப மேலதிக கடமைகளுக்கும் பொறுப்புக்களுக்கும் குறித்தொதுக்கப்படலாம்

## 2.0 தேவைப்படும் குறைந்தபட்ச தகைமைகள் மற்றும் அனுபவம்:

### 2.1 கல்வித் தகைமைகள்

- உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து [1-500 இடையிலான ஒட்டுமொத்த தரவரிசைப்படுத்தலுடன் கூடிய உலகளாவிய பல்கலைக்கழகங்களின் கல்விசார் தரவரிசைப்படுத்தல் (ARWU), QS உலகப் பல்கலைக்கழக தரவரிசைப்படுத்தல் (QSWUR) மற்றும் டைம்ஸ் உயர் கல்வி உலக பல்கலைக்கழக தரவரிசைப்படுத்தல், (THEWUR) என்பனவற்றின் கீழ் விண்ணப்பங்கள் முடிவடையும் நேரத்தில், கிடைக்கப்பெறும் பல்கலைக்கழகத் தரவரிசைப்படுத்தலுக்கமைய] பொருளியலில் சிறப்பு முதுமானிப் பட்டம் **அத்துடன்/அல்லது** பொருளியலில் சிறப்பு கலாநிதிப் பட்டம்.

**அத்துடன்**

- இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து, பின்வரும் கற்கைகளில் ஒன்றில், குறைந்தபட்சம் இரண்டாம் வகுப்பு (மேற் பிரிவு) அல்லது உயர்ந்தபட்சம் 4.0 புள்ளிகளில் குறைந்தபட்சம் 3.5 தரப்புள்ளிச் சராசரி ஒன்றுடன் அல்லது குறைந்தபட்சம் 75% நிறையேற்றப்பட்ட சராசரிப் புள்ளிகளுடன் கூடிய சிறப்பு இளமானிப் பட்டத்தைப் (குறைந்தபட்சம் மூன்று (03) ஆண்டுகளைக் கொண்ட) பெற்றிருத்தல் வேண்டும்.
  - பொருளியல்
  - புள்ளிவிபரவியல் / கணிதம்
  - பொறியியல்
  - கணினி விஞ்ஞானம் / தகவல் தொழில்நுட்பம் / தரவு விஞ்ஞானம்
  - கணக்கீடு / வங்கித்தொழில் / நிதி
  - வர்த்தகம் / முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம்
  - பொதுக் கொள்கை

### 2.2 அனுபவம்:

- இவ்விளம்பரத்தின் 2.1 மற்றும் 3.0ஆம் பிரிவுகளின் கீழ் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சிறப்பு துறைகளின் தொடர்புடைய பட்ட படிப்பிற்கு பிந்திய குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் பணி அனுபவம் (முழுநேர பட்டப்பின் படிப்பு கற்கைகள் மீது செலவிடப்பட்ட உயர்ந்தபட்சம் மூன்று ஆண்டுகளை இது உள்ளடக்கியிருக்கலாம்).

## 3.0 தேவைப்படும் திறன்கள் / தகுதிகள்:

- சிறந்த பகுப்பாய்வு மற்றும் ஆராய்ச்சித் திறன்கள்
- சிறந்த வாய்மொழி மற்றும் எழுத்து மூலமான தொடர்பாடல் திறன்கள்
- அழுத்தமான சூழலில் குழுவாகவோ அல்லது தனியாகவோ பணியாற்றுவதற்கான இயலுமை

## 4.0 வயது:

2026.08.23 அன்று 35 வயது அல்லது அதற்கு குறைவாக இருத்தல்

## 5.0 தொழில்:

- வெற்றியடைந்த அபேட்சகர்கள் தகுதிகாண் காலப்பகுதியினை நிறைவுசெய்ததன் பின்னர் நிரந்தரப் பதவியணியில் உறுதிப்படுத்துவதற்காக கவனத்திற்கொள்ளப்படுவர். உறுதிப்படுத்தப்பட்ட அலுவலர்கள் பொதுச் சேவையின் பதவிநிலை வகுப்பு தரம் IIஇல் பணிக்கமர்த்தப்படுவர்.

## 6.0 ஊதியம் மற்றும் ஏனைய நன்மைகள்:

- இலங்கை மத்திய வங்கியின் ஏற்புடைய சம்பள அளவுத் திட்டங்களுக்கு இணையான கவர்ச்சிகரமான சம்பளம், சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நன்மைகள், மருத்துவ நன்மைகள் திட்டம், ஊழியர் கடன் வசதிகள், ஓய்வூதிய நன்மைகள் மற்றும் பயிற்சி வாய்ப்புக்கள்

## தேர்வு நடைமுறை

குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்சப் பிரமாணங்களை நிறைவுசெய்கின்ற அபேட்சகர்கள் மேலதிக மதிப்பீட்டிற்காக தெரிவட்டவணைப்படுத்தப்படுவர். இது சுயவிபரப் பகுப்பாய்வு நிலைய மதிப்பீடு, தொழில்நுட்பத் திறன் மதிப்பீடுகள் மற்றும் நேர்முகப்பரீட்சைகளில் மதிப்பீடுகள் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கலாம்.

## பதவிக்குரிய நிதியகளும் நிபந்தனைகளும்

ஆட்சேர்ப்புச்செய்யப்பட்ட வெற்றியடைந்த அபேட்சகர்கள் இரண்டு (02) வருடகால தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்படுத்தப்படுவதோடு, தகுதிகாண் காலப்பகுதியில் திருப்திகரமான செயலாற்றல் மற்றும் நடத்தைக்குட்பட்டு, தகுதிகாண் காலப்பகுதியினை வெற்றிகரமாக நிறைவுசெய்ததன் பின்னர் பதவிநிலை வகுப்பு தரம் II இல் அலுவலர்களாக இலங்கை மத்திய வங்கியின் நிரந்தரப் பதவியணியில் உறுதிப்படுத்தப்படுவதற்கு கவனத்திற்கொள்ளப்படுவர்.

ஆட்சேர்ப்புச்செய்யப்படும் அபேட்சகர்கள் ஆரம்பத்தில் இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தில் பணிக்கமர்த்தப்படுவர். இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்கள், வங்கியின் தேவைப்பாடுகளின் அடிப்படையிலும் இது தொடர்பான ஏற்புடைய கொள்கைகளுக்கமையவும் திணைக்களங்களுக்கிடையே சுழற்சி முறையில் மாற்றப்படுவர்.

## விண்ணப்பங்கள்

தேவைப்படும் தகைமைகள் மற்றும் அனுபவத்தைக் கொண்டுள்ள அத்துடன் மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு விரும்புகின்ற அபேட்சகர்கள் தங்கள் விண்ணப்படிவங்களை **2026.08.23 அன்று அல்லது அதற்கு முன்னர்** பின்வரும் இணைப்பின் ஊடாக மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

இணைப்பு: **https://www.cbsl.gov.lk/en/careers**

விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்கும் போது மேலே உள்ள இணைப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதிகளையும் நிபந்தனைகளையும் கண்டிப்பாகப் பின்பற்றுமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

முடிவுத் திகதியிலுள்ளவாறு தேவையான தகைமைகள் மற்றும் அனுபவத்தினைக் கொண்டிராதவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமைப்பெறமாட்டார்கள். தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்யாத, முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற அல்லது குறித்துரைக்கப்பட்ட வடிவத்தில் விண்ணப்பிக்கப்படாத எந்தவொரு விண்ணப்பமும் ஏதேனும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

மேற்குறித்த பதவிக்கான தகுதிப் பிரமாணங்களைப் பூர்த்திசெய்கின்ற கல்விசார் / தொழில்சார் தகைமைகள், சேவை அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் என்பவற்றின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகளை பதிவேற்றம்செய்யுமாறும் மேற்குறித்த பதவிக்கு பொருத்தமான தொடர்புடைய வெளியிட்ட ஆராய்ச்சிப் பணி / கருத்திட்டங்களின் விபரங்களையும் ஏதேனும் வேறு உறுதிப்படுத்தத்தக்க தகவல்களையும் வழங்குமாறும் விண்ணப்பதாரர்கள் கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகின்றனர். கல்விசார் / தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவத்திற்குரிய சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத எந்தவொரு விண்ணப்பமும் ஆட்சேர்ப்புச் செயன்முறையின் எந்தவொரு கட்டத்திலும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் நடாத்தப்படும் சான்றிதழை உறுதிப்படுத்துவதில் தொடர்புடைய ஆவணங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற அபேட்சகர்கள் எவ்விதத்தின் கீழும் தகைமையுடைய அபேட்சகர்களாகக் கருதப்படமாட்டார்கள்.

எந்தவிதத்திலேனும் ஆதரவு தேடுதல் தகைமையிழக்கச் செய்யும். பதவிகளை நிரப்புவதற்கான எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற்கான அல்லது ஆட்சேர்ப்பினைப் பிற்போடுவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. பதவியின் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, தகைமைகளினதும் (கல்விசார் / தொழில்சார் தகைமைகளை உள்ளடக்கிய விடயப் பரப்பு), அனுபவத்தினதும் தொடர்பினைத் தீர்மானிப்பதற்கும் விண்ணப்பங்களை தெரிவட்டவணைப்படுத்துவதற்கும் இலங்கை மத்திய வங்கிக்கு தற்றுணிபுள்ளது. தெரிவட்டவணைப்படுத்தப்படும் அபேட்சகர்கள் மாத்திரம் ஆட்சேர்ப்புச் செயன்முறையின் அடுத்த கட்டத்திற்கு தொடர்புகொள்ளப்படுவர்.

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 20 மற்றும் 24(1) பிரிவுகள் தெரிவுசெய்யப்படும் அனைத்து அபேட்சர்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

பணிப்பாளர் – மனிதவளங்கள்
இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
தொலைபேசி: 011-2477330 தொலைநகல்: 011-2477715